International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நரி விருத்தத்தில் அறக்கருத்துகள்

**முனைவர் இரா. காந்திமதி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மஜ்ஹருல் உலூம் கல்லூரி (தன்னாட்சி)
ஆம்பூர், 635 802

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சமண இலக்கியங்கள் அறச்சிந்தனைகளை வலியுறுத்தும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் திருத்தக்கதேவர் இயற்றிய நரி விருத்தம் நிலையாமை, அறநெறி, பேராசையின் தீமை போன்ற கருத்துகளை எடுத்துரைக்கும் சிற்றிலக்கியமாகும். இவ்வாய்வுக் கட்டுரை நரி விருத்தத்தில் இடம்பெறும் அறக்கருத்துகளை ஆராய்கிறது. குறிப்பாக மனித வாழ்வில் அறத்தின் முக்கியத்துவம், வறியோர்க்கு உதவுதல், அவா அறுத்தல், பிறர்பொருளை விரும்பாமை, பகைமை தவிர்த்தல் போன்ற சமண சமய அறவியல்கள் கதைகளின் வழியாக எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றன என்பதை விளக்குகிறது. மேலும் நரிக்கதை உள்ளிட்ட பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் பேராசை மனிதனை அழிவிற்கு இட்டுச் செல்லும் என்பதையும் இந்நூல் வலியுறுத்துவதை ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. வாழ்க்கை நிலையாமையை உணர்ந்து அறநெறியுடன் வாழ வேண்டும் என்ற சிந்தனையை நரிவிருத்தம் வலியுறுத்துகிறது என்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

**முதன்மைச் சொற்கள்**

நரி விருத்தம், திருத்தக்கதேவர், சமண இலக்கியம், அறம், பேராசை, நிலையாமை

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பிய இலக்கியம் செழித்து வளர்ந்த சோழர் காலத்தில், திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியைப் படைப்பதற்கு முன்பு தம் குருவின் வேண்டுகோளுக்கிணங்க நரி விருத்தம் என்னும் நூலை இயற்றினார். சமண சமய நூலாகிய நரி விருத்தம், சமண சமயக் கொள்கைகளையும் அறக்கோட்பாடுகளையும் விளக்குகிறது. இந்நூலில் இடம்பெறும் அறக்கருத்துகளை விளக்குவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுமுறை (Methodology)**

இவ்வாய்வு விளக்கவியல் (Descriptive Method) மற்றும் பகுப்பாய்வு (Analytical Method) ஆகிய ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நரி விருத்தத்தில் இடம்பெறும் அறக்கருத்துகள் முதன்மைத் தரவாகக் கொண்டு அவை கருத்தியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், திருக்குறள், சமண இலக்கியங்கள் மற்றும் அறவியல் சார்ந்த துணைநூல்களுடன் ஒப்பிட்டு நரிவிருத்தத்தின் அறநெறிச் சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய் வில் முதன்மை மற்றும் துணைநிலை ஆதாரங்களின் வழியாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டு, அவை பொருண்மையுடன் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**ஆய்வு அணுகுமுறை (Research Approach)**

இவ்வாய்வு தரவியல் (Qualitative Research Approach) அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. நரி

விருத்தத்தில் இடம்பெறும் பாடல்கள், கதைகள் மற்றும் அறக்கருத்துகள் உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) முறையில் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, அறம், அவா அறுத்தல், பேராசையின் தீமை, பிறர்பொருள் விரும்பாமை, பகைமை தவிர்த்தல் போன்ற கருத்துகள் சமண அறவியலின் அடிப்படையில் விளக்கப்பட்டு, அவற்றின் சமூக மற்றும் வாழ்வியல் முக்கியத்துவம் மதிப்பிடப்படுகிறது. தேவையான இடங்களில் ஒப்பீட்டு அணுகுமுறையும் (Comparative Approach) கையாளப் பட்டுள்ளது.

### கோட்பாட்டு அடித்தளம் (Theoretical Framework)

இவ்வாய்வு அறவியல் (Ethical Theory) மற்றும் சமண அறக்கோட்பாடு (Jain Ethical Philosophy) ஆகியவற்றை கோட்பாட்டு அடித்தளமாகக் கொண்டுள்ளது. சமண சமயம் வலியுறுத்தும் அகிம்சை, ஆசையறுத்தல், பற்றின்மை, பிறர்பொருள் விரும்பாமை, உயிர்களிடத்து கருணை, துறவறம் போன்ற அறநெறிகள் நரி விருத்தத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பது ஆராயப்பட்டுள்ளது. மேலும், திருக்குறளில் கூறப்படும் அறக்கோட்பாடுகளுட னும் தமிழ் அற இலக்கிய மரபுடனும் ஒப்பிட்டு நரி விருத்தத்தின் அறச்சிந்தனைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் நரி விருத்தம் தனிமனித ஒழுக்கம் மட்டுமன்றி சமூக அறத்தையும் வலியுறுத்தும் சமண இலக்கியமாக விளங்குகிறது என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

### அறம்–வரையறை

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற”** (குறள்.34)

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். அறம் என்பது மனதில் குற்றமின்மையுடன் வாழ்வ தாகும். “அறம் என்னும் சொல்லுக்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கப் படுகின்றன. பொதுவாக நல்லொழுக்கம் என்னும் பொருளிலேயே தமிழ் இலக்கியங்களில் வழங்கப் பட்டுள்ளது” என்று கத.திருநாவுக்கரசு விளக்குகிறார். மேலும், பேரகரமுதலி அறத்திற்கு நல்வினை, ஈகை, சமயம், ஞானம், அறச்சாலை போன்ற பொருள்களையும் வழங்குகிறது. இவ்வாறாக அறம் என்பது மனிதன் நன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளும் செயல்களைக் குறிக்கிறது.

### நரி விருத்தம்

விருத்தம் என்பது தொண்ணூற்று ஆறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். இந்நூலை இயற்றிய திருத்தக்கதேவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். இளமையிலேயே துறவுநெறியைப் பின்பற்றியவர். நரி விருத்தம் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகிய கருத்துகளை எடுத்துரைக் கிறது. பல்வேறு கதைகளின் வழியாக இக்கருத்துகள் அமைக்கப்பட்டுள்ளன.

### கதைகளின் வழி அறங்கள்

சமண சமயம் நல்லறநெறிகளை வலியுறுத்தும் சமயமாகும். திருத்தக்கதேவர் பல்வேறு பாத்திரங் களின் வாழ்க்கை வழியாக சமண அறங்களை எடுத்துரைக்கிறார். சமண அறக்கோட்பாடுகளின் படி வாழாதவர்கள் துன்பத்திற்குள்ளாகி அழிவடைவார்கள் என்பதை அளகாபுரி அரசன் அரவிந்தன் கதையின் மூலம் விளக்குகிறார். இதன் மூலம் பாவச் செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்ற அறம் உணர்த்தப்படுகிறது.

வறியவர்களுக்கு உணவு அளிப்பது உயர்ந்த அறமாகக் கருதப்படுகிறது. கணவனுக்கே உணவு இல்லாத நிலையிலும் முனிவருக்கு உணவு அளித்த பிராமணப் பெண் தெய்வப் பிறவி அடைந்தாள் எனக் கூறப்படுகிறது. “அறமே தலைசிறந்தது” என்ற கருத்தை இக்கதை வலியுறுத்துகிறது.

### அவா அறுத்தல்

மனிதனின் துன்பங்களுக்கு முக்கியக் காரணம் ஆசையாகும். ஆகவே ஆசையை ஒழிக்க வேண்டும் என்பது சமண சமய சிந்தனையாகும். ஆசை மனிதனைத் தன் நிலையை இழக்கச் செய்கிறது. ரிக்வேதமும் மனுஸ்மிருதியும் ஆசை தீமையை எடுத்து உரைக்கின்றன. அதே கருத்தை நரி விருத்தம் தெளிவாக விளக்குகிறது.

### நரிக்கதை மற்றும் பேராசை

நரிக்கதையின் மூலம் பேராசையின் விளைவு எடுத்துரைக்கப்படுகிறது. வேடன் எய்த அம்பு யானையையும் பாம்பையும் கொன்றது; பின்னர் வேடனும் இறந்தான். இம்மூவரின் உடல்களையும் கண்ட நரி, அவை பல நாள்களுக்கு உணவாக இருக்கும் என பேராசை கொண்டது. வில்லின் நாணைக் கடிக்க முயன்ற போதுவில் தொண்டை யில் பாய்ந்து நரி இறந்தது.

**“அத்தியு மரவின் வேடனும்**
**வேடன் கொன்ற துத்திமா நாகந் தானும்**
**கிடப்பவிற்**
**குவையைக் கவ்விச் செத்த விந் நரியைப்**
**போல”**

என்ற பாடல் பேராசையின் அழிவை உணர்த்துகிறது. செல்வத்தைச் சேர்த்து வைத்து பயனுள்ள வழியில் பயன்படுத்தாதவர்களின் நிலையும் இதுபோன்றதே என்பதைக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

### பிறர்பொருளை விரும்பாமை

காகுத்தன் என்னும் வணிகன் ஒரு பெண்ணின்

அணிகலன்களை அபகரிக்க நினைத்து அவளை குளத்தில் தள்ளினான். ஆனால் அவளும் அவனைப் பற்றிக் கொண்டதால் இருவரும் இறந்தனர். இதன் மூலம் பிறர்பொருளை விரும்புதல் அழிவிற்கு வழிவகுக்கும் என்பது உணர்த்தப்படுகிறது.

அதேபோல் தனதேவன் கதையில், நண்பன் ஒப்படைத்த பொருளை மறுத்த சிவதேவன் பாவத்திற்கு உள்ளாகிறான். அடைக்கலப் பொருளை உரியவரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது அறநெறியாக வலியுறுத்தப் படுகிறது.

**வஞ்சனையும் தண்டனையும்**

உறித்தாபதன் என்னும் திருடன் பகலில் சன்னியாசி வேடம் பூண்டு இரவில் திருடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவனுடைய திருட்டை அறிந்த மன்னன் அவனைத் தண்டித்தான். இதன் மூலம் பிறர்பொருளுக்கு ஆசைப்படுதல் இறுதியில் தண்டனையையும் அழிவையும் தரும் என்பது தெளிவாகிறது.

**பகைமை தவிர்த்தல்**

துரியோதனன் பாண்டவர்களுக்கு உரிய நிலத்தை வழங்க மறுத்ததால் தன் சுற்றத்தோடு அழிந்தான் என நரி விருத்தம் எடுத்துரைக்கிறது. தன்னுடைய உறவினருக்கு உரிய பங்கை வழங்காமல் பேராசை கொள்வது அழிவை ஏற்படுத்தும் என்பதை இக்கதை விளக்குகிறது.

**முடிவுரை**

திருத்தக்கதேவர் இயற்றிய நரி விருத்தம் சமண சமயஅறநெறிகளையும் நிலையாமைச் சிந்தனைகளையும் மக்களின் வாழ்வியல் அனுபவங்களோடு இணைத்து எடுத்துரைக் கும் சிற்றிலக்கியமாகும். இந்நூலில் இடம் பெறும் பல்வேறு கதைகளின் வழியாக அறம், ஈகை, அவா அறுத்தல், பிறர்பொருள் விரும்பாமை, பகைமை தவிர்த்தல், வஞ்சனையை விலக்குதல் போன்ற உயரிய அறக்கருத்துகள் வலியுறுத்தப் படுகின்றன. மனிதனின் பேராசையும் ஒழுக்கமற்ற செயல்களும் தனிமனித மற்றும் சமூக வாழ்வில் அழிவை ஏற்படுத்தும் என்பதையும், அற நெறியைப் பின்பற்றுவோர் உயர்ந்த வாழ்க்கையை அடைவார்கள் என்பதையும் நூல் தெளிவுபடுத்துகிறது.

இவ்வாய்வின் வழியாக நரி விருத்தம் வெறும் சமயஇலக்கியமாக மட்டுமல்லாமல், மனித வாழ்வை நெறிப்படுத்தும் அறவியல் ஆவணமாக வும் விளங்குகிறது என்பது நிறுவப்பட்டுள்ளது. சமணஅறக்கோட்பாடுகள் தமிழர் அறச் சிந்தனையுடன் இயைந்திருப்ப தையும், அவை இன்றைய சமூகச்சூழலிலும் பொருந்தக்கூடிய பொதுமை அறநெறிகளாக அமைந்துள்ளன என்பதையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. குறிப்பாக, பேராசை, வன்முறை, ஒழுக்கச் சிதைவு போன்ற சமகால சமூகப் பிரச்சினை களுக்குத் தீர்வாக நரி விருத்தம் முன்வைக்கும் அறவியல் சிந்தனைகள் இன்றும் பொருத்த முடைய வையாக உள்ளன. எனவே, நரி விருத்தம் இலக்கிய, சமய மற்றும் அறவியல் நோக்குகளில் மேலும் ஆழமான ஆய்வுகளுக்கு உரிய வளமான முதன்மை ஆதார நூலாகத் திகழ்கிறது. இந்நூலைத் திருக்குறள், நாலடியார், சீவகசிந்தாமணி போன்ற தமிழ் அற இலக்கியங்களுடன் ஒப்பிட்டு மேற்கொள்ளப்படும் எதிர்கால ஆய்வுகள், தமிழறச் சிந்தனையின் வளர்ச்சியையும் சமண இலக்கியங்களின் பங்களிப்பையும் புதிய பரிமாணங்களில் வெளிக் கொணரும் என்பது இவ்வாய்வின் முக்கியக் கண்டறிதலாகும்.

**துணை நூல்கள்**

1. ஆறுமுகம், எஸ். (உரை). நரி விருத்தம். சென்னை: ஜைன இளைஞர் மன்றம், 1975.
2. தேவர், திருத்தக்க. நரி விருத்தம். சென்னை: சாரதா பதிப்பகம், 2018.
3. திருவள்ளுவர். திருக்குறள். பரிமேலழகர் உரை. சென்னை: கழக வெளியீடு, 2019.
4. திருநாவுக்கரசு, கத. திருக்குறள் நீதி இலக்கியம். சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1977.
5. தேவநேயன், ஞா. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1985.
6. உ.வே. சாமிநாதையர் (பதி.). சீவகசிந்தாமணி. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1947.
7. வேங்கடசாமி, மயிலை சீனி. சமணமும் தமிழும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
8. சுப்பிரமணியன், ச.வே. சங்க இலக்கிய வாழ்வியல். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2012.
9. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு. சென்னை: சாகித்திய அகாதெமி, 2008.
10. கைலாசபதி, க. தமிழர் பண்பாடு. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2011.
11. தமிழண்ணல். சங்க இலக்கிய ஒப்பீடு. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம், 2010.
12. இராசமாணிக்கனார், மா. தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2009.
13. நாகசாமி, இரா. தமிழர் வரலாறும் பண்பாடும். சென்னை: தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2010.